25th September 1956]

என்று யோசித்துக்கொண்டுமிருக்கிறார்கள். மேலும் விற்பனை வரி அட்வைசரி கமிட்டி ஒன்று புதியதாக நியமிக்கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அது கூடும். அப்பொழுது அது இதைப்பற்றியெல்லாம் யோசனை செய்யும்.

Sri V. BALAKRISHNAN : ஒரு முனை விற்பனை வரியை நீக்க வேண்டும் என்று வியாபாரிகள் போர் முனையை நடத்தப்போகிறார்கள் என்பது கனம் மந்திரிக்குத் தெரியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : என்ன போர் என்பது தெரியவில்லை. ஆயுதம் தாங்கிய போரா அல்லது ஆயுதம் தாங்காத போரா என்பதைப்பற்றி தெரிந்துகொள்ளவேண்டும்.

Sri S. PANCHAKSHARAM : From a recent utterance of the Hon. Prime Minister of India we inferred that all essential articles, particularly foodgrains should be exempted from sales tax completely. Is there any such proposal under the consideration of this Government?

The Hon. Sri M. A. MANICKAVELU : I have already said that all these debatable questions and problems would be considered by the Advisory Committee.

Sri K. T. RAJU : தற்போது பல-கட்ட விற்பனை வரி மூலம் இடைக்கும் வருமானத்தைப்போலவே ஒரு-முனை வரி மூலம் வருமானம் இடைக்கும் என்றும் அதனால் ஒரு-முனை வரியையே விதிக்கலாம் என்றும், அப்படி விதித்தால் வரக்கூடிய வருமானம் குறையாமல் இருக்கும்படியாக பார்த்துக் கொள்வதாக வியாபாரிகள் வாக்குறுதி சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் வியாபாரிகளை நம்பி ஒரு-முனை விற்பனை வரியை விதித்து பரீட்சார்த்தமாகவாவது ஒரு வருஷம் பார்த்து அந்தப்படி வருமானம் குறையாமல் இருககிறதா என்று சர்க்கார் பார்க்கக்கூடாதா என்று கேட்கிறேன். மக்கள்பேரில் இந்த சர்க்கார் ஏன் நம்பிக்கை வைக்கக்கூடாது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : வியாபாரிகளை நேரடியாகக் கண்டு பேச சீக்கிரத்தில் சந்தர்ப்பம் ஏற்படப்போகிறது. அப்பொழுது இதைப்பற்றியெல்லாம் யோசிக்கப்படும்.

Sri N. K. PALANISAMY : Regarding question number 204, in the Second Five-Year Plan . . .

Mr. SPEAKER : We are on question 205. We cannot go back to question 204.

* 206 *Q*.—Sri K. MADHAVAN NAMBIAR (on behalf of Sri K. C. Gopalan Unni) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any communication from the Government of India regarding the advisability of introducing single-point sales tax instead of the prevailing multi-point system ; and

(*b*) if so, whether the Government will place a copy of it on the table of the House.

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No.

(*b*) Does not arise.